## 28.2 வேளாண்மை துறைத் திட்டங்கள் பற்றிய உயர்நிலை குழுவின் பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்

---

வேளாண்மை (வ & தி) துறை

அரசாணை (நிலை) எண். 220 நாள் : 07.06.1999

படிக்க :

01. அரசாணை (நிலை) எண்.377 வேளாண்மைத் துறை, நாள்.04.09.1997.
02. அரசு நேர்முகக் கடித எண்.34379/வ (ம) தி/98–3/ வேளாண்மைத் துறை நாள்.11.1.99
03. அரசு நேர்முகக் கடித எண்.5286 / வ(ம தி 99.3 வேளாண்மைத் துறைநாள்.31.03.99
04. அரசு நேர்முக கடிதம் எண்.5286/வ(ம)தி/99–5 வேளாண்மைத் துறை நாள்.12.04.99
05. ஊரக வளர்ச்சித்துறை செயலர் அவர்களின் நேர்முக கடித எண்.14532/சி4/99/ நாள்.11.05.99.

**ஆணை**

மாநில திட்டக் குழுவின் இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் வேளாண்மை துறையின் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதற்கும், கண்காணிப்பதற்கும், ஊராட்சி அமைப்பகளுக்குப் பொறுப்புக்களை வழங்கி பார்வை 1–ல் கண்டுள்ள அரசாணையில் ஆணை வெளியிப்பட்டுள்ளது.

2. 1997.98–ம் ஆண்டு சட்டப் பேரவையில் நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு மேலும் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் வழங்க வேண்டுமென்று பேரவை உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களை அமைப்பாளராகவும், சட்டமன்றத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளை உறுப்பினர்களகவும், கொண்டு உயர்நிலைக்குழு அமைக்கப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அரசு அமைத்த உயர்நிலைக் குழு 11.01.1999–அன்று தனது அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தது.

3. 03.05.1999–மற்றும் 04.05.1999–ஆகிய நாட்களில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டங்களில் உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டன. வேளாண்மை துறையின் திட்டப்பணிகளை செயல்படுத்துவதின் பொருட்டு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் பொறுப்புகளை ஒப்படைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி இவ்வாணையின் பிற்சேர்க்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்களை மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்க ஆணையிடப்படுகின்றன.

4. பிற்சேர்க்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைப்படி திட்டங்களை நடைமுறைப்படுத்த தனது நிர்வாகத்தின் கீழிருக்கும் சார் அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

**நா.ஆதிமூலம்**
அரசு செயலாளர்

## பிற்சேர்க்கை.1

## வேளாண்மை மற்றும்வேளாண்மை சார்ந்த விரிவாக்கம்

### வேளாண்மை

### கிராம ஊராட்சிகள்

**01.** வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வேளாண் இடுபொருட்களான விதைகள் ரசாயன உரங்கள், உயிர் உரங்கள் பூச்சி பூஞ்சானைக் கொல்லி மருந்துகள் சரியான தருணத்தில் இலகுவில் கிடைக்கின்ற நிலையில் கிராம ஊராட்சிகள் ஆலோசனை வழங்கிடவும், பயனாளிகளை தேர்வு செய்திடவும் உதவிடலாம். அரசாணை (நிலை) எண்.377, நாள்.04.9.97–ல் பயனாளிகளை கண்டறிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**02.** உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு, இலாபகரமான விலை கிடைக்கவும், விரைவில் அழுகிவிடக்கூடிய பழங்கள் காய்கறிகளுக்கு இலாபகரமான விலை கிடைக்கும் வரை பாதுகாத்து வைப்பதற்கு ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலம் குளிர் சாதன சேமிப்பு கிடங்குகள் சம்பந்தப்பட்ட ஊராட்சி பகுதிகளில் அமைக்க ஆலோசனைகள் வழங்கலாம்.

**03.** விவசாயிகளிடையே ஒரு ஆரோக்கியமான போட்டியை ஏற்படுத்தி, வேளாண் மகசூலை அதிகரிக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும் பயிர்மகசூல் போட்டிகளில் சம்பந்தப்பட்ட ஊராட்சி பகுதி விவசாயிகள் கலந்து பயன்பெற போதிய விளம்பரங்கள் செய்து உதவலாம்.

**04.** வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு செயல்படுத்தப்படும் வேளாண்வளர்ச்சி திட்டங்களான ஒருங்கிணைந்த தானிய மேம்பாட்டு திட்டம் (அரிசி) நெல், சில தான்யங்கள், பயறுவகைகள் எண்ணெய் வித்துக்கள், பருத்தி போன்றவற்றை பெருக்கி பகிர்வு செய்யும் திட்டம் பயிர் மற்றும் செடி பாதுகாப்பு குறித்த திட்டங்கள், விதை பரிசோதனைதிட்டம், ஒருங்கிணைந்த நோய் பூச்சி கட்டுப்பாட்டு தொழில் நுணுக்கத்தை மக்களிடையே பரவ செய்யும் திட்டம், நெல் தரிசுகளில் பருப்பு வகைகள் பயிரிட மேம்பட்ட செயல் முறை திட்டம், மண் மற்றும் நீர்வளங்களைப் பேணுதல் தொடர்பான திட்ங்கள், சிறு/குறு விவசாயிகளுக்குப் பயிர் ஈட்டுறுதி காப்பு திட்டங்கள், சிறு/குறு விவசாயிகளுக்கு உரமான்யம் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களில் பயனாளிகளை கண்டறிய சம்பந்தப்பட்ட விவசாயத்துறை அலுவலர்களுக்கு உதவலாம். இத்தகைய திட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்டு மான்யம் மற்றும் திட்ட உதவிகள் வழங்கப்பட்ட பயனாளிகளின் பெயர் மற்றும் திட்ட உதவி விவரங்களை தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டுக்கும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் ஊராட்சிகளுக்கு தெரிவிக்கலாம் என ஏற்கனவே ஆணையிடப்பட்டுள்ளது. (அரசாணை எண்.377,வேளாண்மைத்துறைநாள்.04.09.97)

**05.** புரதம் மற்றும் கொழுப்பு (எண்ணெய்) சத்து வகைகளில் தன்னிறைவு பெற, ஊரட்சிகள் முனைந்து செயல்பட்டு,சோயா,மொச்சை மற்றும்அவரை போன்ற பயிர்களை தனி பயிராகவும், ஊடுபயிராகவும், இருபோகச் சாகுபடிகளில் இரண்டாம் பயிராக பயிரிடச் செய்து , பரப்பளவையும், உற்பத்தியையும் அதிகரிக்க உதவி செய்யலாம்.

**06.** தோட்டக்கலை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில் இலவசமாகவும், மான்ய விலையிலும் வழங்கப்படும் கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்கி தனி பயிராக பயிரிட வாய்ப்புள்ள பகுதிகளிலும் தோப்பாகவும், வரப்புகளிலும், நடவு செய்து பரப்பளவையும், உற்பத்தியையும் அதிகரிக்கலாம். மேற்படி துறை திட்டங்களில் உள்ள வாய்ப்புகளை பயன்படுத்தி, ஊராட்சிகளின் கட்டுப்பாட்டிலுள்ள தரிசு நிலங்களில் பழ மரங்களை சாகுபடி செய்வதற்கு உதவி செய்யலாம். (அரசு நேர்முக கடித எண்.34379/வ (ம) தி/ 98 நாள்.11.01.99–ல் ஆலோசனை வழங்கும் அதிகாரமும், அரசாணை (நிலை) எண். 377, நாள்.04.09.97–ல் ஒருங்கிணைத்து தரிசு நில மேம்பாடு திட்டத்தை செயல்படுத்த உதவும் அதிகாரமும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது).

**07.** வேளாண் உற்பத்தியில் தரமான விதைகளே முதன்முதல், இடு பொருளாகும். விதைகள் தரமற்றதாக இருந்தால், எத்தனை தொழில் நுட்பங்களை புகுத்தினாலும், இடுபொருட்களை இட்டாலும், எதிர்பார்த்த மகசூல் கிடைக்காது. எனவே, வேளாண் இடு பொருட்களில் மிகவும் முக்கியமான இடு பொருளான விதைகளைத் தரமானதாகவும், சரியான முளைப்பு திறன் உள்ள நிலையிலும் பாதுகாத்து வைத்தல் மிக முக்கியமானதாகும். எனவே, கிராம ஊராட்சிகள் சம்பந்தப்பட்ட ஊராட்சி பகுதிகளில் விஞ்ஞான முறைப்படி விதைசேமிப்பு கிடங்குகள் சம்பந்தப்பட்ட துறையின் மூலம் கட்டுவதற்காக இடத்தை கண்டறிந்து உதவலாம்.

**08.** பெரும்பாலான விவசாயிகள் விளை பொருட்களை இருப்பு வைக்க வசதியில்லாமலும், பண நெருக்கடியினாலும், நல்ல விலையை எதிர்பார்த்து விற்பனை செய்ய முடியாமல் குறைந்த விலைக்கு விற்று நஷ்டம்

அடைகின்றனர். எனவே, நல்ல விலையில் விற்று உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு ஏற்ற விலை கிடைக்க வகை செய்யும் பொருட்டு, ஊராட்சிகள் சம்பந்தப்பட்ட வேளாண்மை விற்பனைத்துறை அலுவலர்களைத் தொடர்பு கொண்டு ஊராட்சிகளில் ஊரக கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும் வேளாண் பொருட்களுக்கு, குறைந்த வட்டியில், இருப்பின் மதிப்பில் 50 சதம் வரை முன்பணம் வழங்குவதற்கும் ஊராட்சி மன்றம் பரிந்துரைக்கலாம்.

**ஊராட்சி ஒன்றியங்கள்.**

01. வேளாண் துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த தான்ய உற்பத்தி திட்டத்தில் (அரிசி) வழங்கப்படும் விதை, பூச்சி பூஞ்சான மருந்துகள், பயிர் பாதுகாப்பு கருவிகள் உயிர் உரங்கள் போன்ற இடு பொருட்களை வாங்குவதற்கு பயனாளிகளை ஊக்குவித்து, வழங்கப்படுவதை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள், ஒன்றிய வளாகத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் செயல்படுத்தலாம்.

02. மேலே குறிப்பிட்ட ஒருங்கிணைந்த தான்ய உற்பத்தி திட்டத்தைப் போலவே வேளாண் துறையில் செயல்படுத்தப்படும், இதர திட்டங்களான நெல், சிறுதான்யங்கள் பருத்தி பயறு வகைகள், மற்றும் எண்ணெய் வித்து பெருக்க/உற்பத்தி திட்டங்களிலும் வழங்கப்படும் பல்வேறு மான்யங்களுக்கும், தகுதியான தேவையுள்ள பயனாளிகளை தேர்வு செய்து வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்படுவதை செயல்படுத்தலாம்.

03. சோயா, மொச்சை / அவரை விதைகளை தனி பயிராகவும், ஊடு பயிராகவும், சாகுபடி செய்வதற்கும், விளை பொருட்களை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகள் மற்றும் உள்கட்டுமான அமைப்புகளை ஏற்படுத்தவும், ஊராட்சி ஒன்றிய அளவில் திட்ட மிட்ட ஆலோசனை வழங்கலாம்.

04. வேளாண் விதை பொருட்களைச் சேமித்து வைக்கவும், தற்காலிகமாக கடன் வழங்கவும், ஊராட்சி ஒன்றியங்கள் வாய்ப்புள்ள கிராமங்களை தேர்வு செய்து, சம்பந்தப்பட்ட ஆரம்ப விவசாய கூட்டுறவு வங்கியுடன் தொடர்பு கொண்டு பயிர் கடன் வழங்கவும் மற்றும் ஊரக கிடங்குகள் கட்டுவதற்கும் ஆலோசனை வழங்கலாம்.

05. ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் தோட்டக்கலை துறையினால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் மான்யத்தில் வழங்கப்படும் பழக்கன்றுகளின் தேவைகள் மற்றும் வாய்ப்புக்களை ஆய்வு செய்து அவற்றை பகிர்ந்தளிக்க உதவிடலாம். மேலும் தனியாரால் நிர்வகிக்கப்படு நாற்றங்கால் உற்பத்தியினை ஊக்கப்படுத்தலாம் (ஏற்கனவே, பயனாளிகளை கண்டறிய உதவுவதற்கு அதிகாரம் அரசு நேர்முக கடித எண்.34379/வ (ம) தி) நாள்.11.01.99–ல் வழங்கப்பட்டுள்ளது.)

06. ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் வேளாண்மை சார்ந்த பணிகளை பார்வையிட்டும், கிராம ஊராட்சிகளின் திட்டங்களை ஒருங்கிணைத்தும், உற்பத்தியை பெறுவதற்கு வழிமுறைகளைச் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்து சம்பந்தப்பட்ட முகமைகளுடன் இணைந்து செயல்படுத்திட ஆலோசனை வழங்கலாம். உற்பத்தி பெருக்குவதற்கான வழிமுறைகளையும் விபரங்களையும் உருவாக்கிட ஆலோசனை வழங்கலாம்.

07. இயற்கையின் சீற்றத்தாலோ இதர காரணங்களினாலோ வேளாண் உற்பத்தி பாதிக்கப்படும் தருவாயில், வேளாண் பெருமக்களின் பளுவை குறைக்கவும், நிவாரணம் அளிக்கின்ற முறையிலும், சிறு/குறு விவசாயிகளுக்கு பயிர் காப்புறுதித் திட்டங்களை செயல்படுத்திட ஊராட்சிகள் உதவலாம். உரமான்யம் வழங்கும் திட்டங்களில் சிறு விவசாயிகளுக்கு உரிய முறையில் மான்யங்கள் வழங்க ஆலோசனை வழங்கலாம்.

08. ஊராட்சி ஒன்றிய பகுதிகளுக்குத் தேவைப்படும் வேளாண் இடுபொருட்களைக் கணக்கிட்டு அவைகள் எந்தெந்த பருவ காலத்தில் தேவைப்படும் என்பதையும் ஆராய்ந்து, தேவைப்படும் அளவு இடுபொருட்களை அந்த பகுதிகளுக்கு உரிய காலத்தில் எந்தவித தடைகளும் இன்றி கிடைக்க உதவலாம்.

09. வேளாண் துறையில் விரிவாக்க அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களது சேவையை சரியான முறையில் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள உதவுவதுடன், விவசாயிகளுக்கு பயிற்சி அளிப்பது சம்பந்தமான ஆலோசனை வழங்கலாம்.

10. இயற்கையின் முக்கிய ஆதாரங்களான நீர்வளத்தையும், நிலவளத்தையும் பேணும் பொருட்டு, வேளாண்மை மற்றும் வேளாண் பொறியியல் துறைகளின் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது. இவை குறித்து மக்களிடம் தகவல்களை பரப்பி இயற்கை வளங்களை பாதுகாக்க உதவலாம்.

11. முறையான திட்டமிடலுக்கு, சரியான புள்ளி விபரங்கள் தேவை, ஒன்றிய பகுதிகளில் அடிப்படை புள்ளி விபரங்களான மொத்த பரப்பளவு, சாகுபடிப் பரப்பு, பயிர் வாரியான பரப்பளவு, நீர் ஆதாரங்கள் போன்ற புள்ளி விபரங்களை திரட்டுவதற்கு உதவலாம்.

12. ஊராட்சி ஒன்றியங்களில், வேளாண் பருவ காலத்திற்கு முன்பே, ஊராட்சிகள் வாயிலாக ஆண்டு பயிர்த்

திட்டங்கள் தயார் செய்து அத்திட்டங்களுக்கேற்ப காலந்தவறாது, அந்தந்த பகுதிகளுக்கு பயிர்க்கடனும், அத்துடன் வாங்கப்படும், உரம், பூச்சி, பூஞ்சான விஷங்களும் வழங்குவதற்கு முன்னோடி வங்கி நிர்வாகிகளுடன் தொடர்பு கொண்டு கிளை நிறுவனங்களின் மூலம் கடன் வாங்கப்படுவதற்கு ஆலோசனை வழங்கலாம்.

13. அறுவடைக்கு பின், உரிய நேர்த்தி முறைகளைக் கடைபிடிக்காததால் மட்டும், நமது நாட்டின் மொத்த உற்பத்தியில் பத்து விழுக்காடுக்கும், அதிகமான விளை பொருட்கள் சேதமடைந்து வருகின்றன என்பதை வல்லுநர்களின் கணிப்பு. எனவே, ஊராட்சி ஒன்றியங்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள கூட்டுறவு ஒழுங்கு முறை கூடங்களை தொடர்பு கொண்டு விலை பொருட்களை விஞ்ஞான ரீதியாக சேமித்து வைக்கவும், தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகும் காலங்களில் விளை பொருட்களை குறிப்பாக காய்கறிகள், பழங்கள் போன்றவைகள் பதனிடவும், குளிர் பதன அறைகளை ஏற்படுத்துவது போன்ற பணிகளை மேற்பார்வையிட்டு ஆலோசனை வழங்கலாம். கூட்டுறவு அங்காடிகளுக்கு தேவைப்படும் பல்வகை பொருட்களுக்கு ஏற்ப வேளாண் திட்டங்களை வகுத்து அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படுவதற்கு ஆலோசனை வழங்கலாம். இது தொடர்பாக பயிற்சிகளை திட்டமிட்டு செயல்படுத்தவும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஏனைய முகமைகள் மூலம் விளை பொருட்களை பதனிடுதல், விற்பனை செய்தல் ஆகிய பணிகளை திட்டமிட்டு, அதற்கான உள் கட்டமைப்புகளை மேம்படுத்தவும் ஆலோசனை வழங்கலாம்.

**மாவட்ட ஊராட்சிகள்.**

01. விவசாய மற்றும் தோட்டக்கலை பயிர்களின் உற்பத்தியினைப் பெருக்கும் பொருட்டு மாவட்டத்திற்கான விவசாய வளர்ச்சி திட்டம் ஒன்றினைத் தயாரிக்க மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரம் அளிக்கலாம்.

02. விவசாய உற்பத்தி குழுவின் உதவியுடன் மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் தேவைகளை காலமுறை வாரியாக கண்டறிந்து தேவையான ஆலோசனைகளை வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனை இயக்குநர்கள் மற்றும் வேளாண்மை பொறியியல் துறையின் தலைமை பொறியாளர் ஆகியோருக்கு வழங்கலாம்.

03. விவசாயத் துறையின் ஆராய்ச்சி பூர்வமாக ஏற்படும் தொழில் நுட்பங்களை விவசாயிகளிடம் பரப்பும் பொருட்டும், மேற்கொண்டு ஆலோசிப்பது குறித்தும், ஆண்டிற்கு ஒருமுறை வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு கருத்தரங்கினை மாவட்ட ஊராட்சிகள் தங்கள் மாவட்டங்களில் நடத்த தேவையான ஏற்பாடுகளையும் உதவிகளையும் செய்யலாம்.

04. வேளாண் விளை பொருட்களை விஞ்ஞான முறைப்படி சேமிக்கவும், குளிர்பதன வசதிகள் செய்வதும், விற்பனைக்கான உள் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்கான ஆலோசனைகள் வழங்கலாம். மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் ஒவ்வொரு அமைப்புகளும் பணிகளை வரையறுத்து மேற்படி பணிகளை செயல்படுத்தவும், மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அனைத்து வேளாண் திட்டங்களையும், வேளாண்மை வளர்ச்சிக்காகவும், ஆலோசனை வழங்கலாம். வேளாண் சார்ந்த பயிர்க்கடன் கிணறு போன்ற உள்கட்டமைப்புக் கடன்களை சுணக்கமின்றி உரிய காலத்தில் கிடைப்பதற்கும், இதர வேளாண் இடு பொருட்களான தாவர விதைகள், உரங்கள் பூச்சி பூஞ்சான விஷக்கொல்லிகள் போன்ற அனைத்து பொருள்களும் உரிய நேரத்தில் கிடைக்க ஏற்பாடு செய்ய மேற்பார்வையிட்டு ஆலோசனை வழங்கலாம்.

05. மாவட்ட அளவில் தனியார் மற்றும் அரசு விதை விநியோக நிறுவனங்களின் மூலம் தரமான விதைகள் விற்பனை செய்யப்படுகின்றதா என்பதை ஆய்வு செய்வதற்கு சம்பந்தப்பட்ட விதை சான்று துறைகளுக்கு ஆலோசனை வழங்கலாம்.

06. மாவட்ட ஊராட்சிகள், மாவட்டத்தில் முதன்மை நிறுவன அமைப்பு என்ற முறையில் அம்மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள், கிராம ஊராட்சிகளின் மக்கள் பிரதி நிதிகளுடன் கலந்தாலோசித்து, அவ்வப் பகுதிகளின் வேளாண் தேவைகளையும் அதன் அளவுகளையும், ஆராய்ந்து வேளாண்மை துறையின் சம்பந்தப்பட்ட மாவட்ட, கோட்ட, வட்டார மற்றும் ஊராட்சிகளின் மட்டங்களில் உள்ள அலுவலர்களின் மூலம் ஒருங்கிணைந்து தானிய மேம்பாட்டு திட்டம் போன்ற திட்டங்களுக்கு ஆலோசனைகளை மாவட்ட ஊராட்சிகள் வேளாண்மை துறைக்கு வழங்கலாம்.

## 28. DEVOLUTION OF POWERS

**பிற்சேர்க்கை 2**

**மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கான திட்டமிடுதல்.**

கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான வளர்ச்சி திட்டத்தை உருவாக்குவதற்கு பின்வருமாறு வேளாண்மை துறை அலுவலர்கள் ஒவ்வொரு பகுதி வளர்ச்சி திட்டத்திற்கும் பொறுப்பேற்று உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி புரிவார்கள்.

| வ. எண் | பொருள் | துறை | திட்டம் தயாரிக்க பொறுப்புடைய அலுவலர்கள். |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| **அ. கிராம ஊராட்சி** | | | |
| 1 | உற்பத்தி மற்றும் பாதுகாப்பு | வேளாண்மை (ம) தோட்டக்கலைத்துறை | வேளாண்மைஅலுவலர், தோட்டக்கலை அலுவலர் |
| 2 | மண்வளம், நீர்வளம், பாதுகாப்பு | வேளாண்மை மற்றும் வனத்துறை | வேளாண்மை அலுவலர், வனச்சரகர் |
| 3 | பாசனப் பகுதி மேம்பாடு | வேளாண்மை பொறியியல் துறை. | உதவிப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) |
| **ஆ. ஊராட்சி ஒன்றியம்.** | | | |
| 1 | பயிர் உற்பத்தி மற்றும் பாதுகாப்பு | வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை. | உதவி வேளாண்மைஅலுவலர். |
| 2 | மண்வளம், நீர்வளம் பாதுகாப்பு மேம்பாடு | வேளாண்மை மற்றும் வனத்துறை | மாவட்ட வன அலுவலர், |
| 3 | பாசன பகுதி மேம்பாடு | வேளாண்மை பொறியியல் துறை. | உதவிப் பொறியாளர் (வே.பொ). |
| **இ. மாவட்ட ஊராட்சி.** | | | |
| 01. | பயிர் உற்பத்தி மற்றும் பாதுகாப்பு | வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை. | சூவளாண்மை இணை இயக்குநர் மற்றும் உதவி இயக்குநர் தோட்டக்கலைத் துறை |
| 02. | மண்வளம், நீர்வளம் பாதுகாப்பு | வேளாண்மை மற்றும் வனத்துறை | மாவட்ட வன அலுவலர், மேற்பார்வை பொறியாளர் (வே பொ). |
| 03. | பாசனப் பகுதி மேம்பாடு | வேளாண்மைப் பொறியியல் துறை. | உதவிப் பொறியாளர் (வே.பொ). |

## பிற்சேர்க்கை 3

## ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள்

### ஊராட்சி ஒன்றியங்கள்.

**01.**உதவி செயற் பொறியாளர் வேளாண்மை பொறியியல் துறை மற்றும் உதவி இயக்குநர், வேளாண்மைத் துறை, ஆகியோருடன் வறட்சி பகுதி மேம்பாட்டு திட்டத்தை ஆய்வு செய்யலாம்.

**02.** உதவி செயற் பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை மற்றும் உதவி செயற்பொறியாளர், நீர் ஆதாரத்துறை , ஆகியோருடன் சிறுபாசன சிறப்பு திட்டத்தை (முன்னாள் ஜமீன் குளங்கள் மற்றும் பொதுப்பணித்துறை குளங்கள் ) ஆய்வு செய்யலாம்.

### மாவட்ட ஊராட்சி

**01.**எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி திட்டம் பற்றி இணை வேளாண்மை இயக்குநர் அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.

**02.** தேசிய பயிறு வகைகள் உற்பத்தி திட்டம் பற்றி இணை வேளாண்மை இயக்குநர் அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.

**03.** வறட்சி பகுதி மேம்பாட்டு திட்டம் பற்றி திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையுடன் ஆய்வு செய்யலாம்.

**04.** மண்வளப் பாதுகாப்புத் திட்டம் பற்றி செயற் பொறியாளர் வேளாண்மைப் பொறியியல் துறை அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.

**05.** மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பாசன வசதிகளான குளங்களை கட்டுதல் பற்றி செயற் பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை (மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டு திட்டம்) அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.

**நா.ஆதிமூலம்**
அரசு செயலாளர்